உ

பிறைசை-பாப்பயதேவர்

திவ்விய சங்கீர்த்தன மாலையும்

பறங்கிப்பேட்டை

ஸ்ரீ துரைசாமி ஞானிகள் துதியும்.

ப. அ. முத்துத்தாண்டவராயன்,

நூலாசிரியன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பிறைசை-பாப்பய தேவர்

பேரில்

திவ்விய சங்கீர்த்தன மாலை.

இஃது

திருச்சிற்றம்பல முடையாரடிமை

பறங்கிப்பேட்டை, வித்துவசிகாமணி

ஸா-ா-ா-ஸ்ரீ, ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளையவர்கள்

1896ல் இயற்றியது.

குமரன் பிரஸ், சீகாழி.

[...ரதி உ௲௦] 1936 [விலை அணா 4.

காப்பு.

ஸ்துதி கவிகள்.

திவ்விய தத்துவ சங்கீர்த்தனம்
திவ்விய சகள சங்கீர்த்தனம்
திவ்விய நாம சங்கீர்த்தனம்
திவ்விய ரூப சங்கீர்த்தனம்
திவ்விய கிரியா சங்கீர்த்தனம்
திவ்விய தேச சங்கீர்த்தனம்
திவ்விய பாத சங்கீர்த்தனம்
திவ்விய மங்கள சங்கீர்த்தனம்
திவ்வியோபதேச சங்கீர்த்தனம்
திவ்வியானுக்கிரக சங்கீர்த்தனம்
திவ்விய மானச சங்கீர்த்தனம்,

உ

சிவமயம்.

பிறைசை–பாப்பய தேவர்

திவ்விய சங்கீர்த்தன மாலை.

காப்பு.

விநாயகர்—வெண்பா.

மணிகொண்ட கோவைப் பிறைசை வளர்பன்
மணிகொண்ட கோவை வளரு—மணிகொண்ட
விண்ணு றலைக்கும் விலாழிப் புலக்களபந்
தண்ணு றலைக்குந் தடம்.

திருநெடுமோல்—கலிநிலைத்துறை.

களவிற் கன்றினுற் கடலினு லாசையிற் கலங்கக்
களவிற் கன்றினுற் கனிபுணர் புரத்தனக் காலங்
களவிற் கன்றினுல் கனியுகுத் தப்பகை கடிந்து
களவிற் கன்றினுற் கருணைசெய் கண்ணனே காப்பு.

ஸ்துதி கவிகள்.

ஆளுடைய நாயகர்—நேரிசை யாசிரியப்பா.

விரிந்தன்று மனனே விரிந்தன்று மனனே
சரிந்தம ராடிய சாஅய்க் கடுக
விரிந்தன்று மனனே விரிந்தன்று மனனே
பழமறை நவின்ற நவநெறி பயின்று
விரிந்தன்று மனனே விரிந்தன்று மனனே
யாரந் தாங்கிய வாரந் தடமுலைச்
சசிமுதன் மடந்தையர் தாழாது களத்து
விடமமு தாக்கிய விமலன்
கடமல ரென்றுந் தழுவுதற் பொருட்டே.

ஆளுடைய நாயகியார்—ஆசிரியத்தாழிசை.

சேலார் திருவிழிச் செல்வி பெருந்தேவி
பாலார் மொழியினள் பங்கயச் செம்பதம்
மாலார் மலவிருண் மாற்று கதிரென்னே.

முற்று விளமுலை மூன்று புவனத்தள்
பற்றுய பற்றினள் பங்கயச் செம்பதம்
வற்று மலவிருண் மாற்று கதிரென்னே.

மூர விளங்கொடி முத்தி மலைமகள்
பார வுலகினள் பங்கயச் செம்பதம்
வார மலவிருண் மாற்று கதிரென்னே.

ஆளுடைய பிள்ளையார்—வெள்ளோத் தாழிசை.

வாங்கு துயராழுந்தி வாழி மடப்பேதாய்
தாங்குதுணைச் சம்பந்தன் றுளறையா தென்குரைய
வீங்கின் றிருந்து விடல்.

இன்ன லஞராழுந்தி யேழை மடப்பேதா
யென்ன லருளாள னேரறையா தென்குரைய
வின்ன ரிருந்து விடல்.

ஐய மயலழுந்தி யன்றோ மடப்பேதாய்
செய்ய வருளாளன் சீரறையர் தென்குரைய
வெய்ய விருந்து விடல்.

சேவியறிவுறூஉ மருட்பா.

அறைமின் பிறைசை யகநகர்பாப் பையற்
கறைமின் கலக்கங் களைமின்—மறையீ
ரவநெறி நீத்துத் தவநிலை சேரப்
பிணைமின் மருத்தார் பிடிமின்
துணைமலர் நுந்தந் துணைக்கட னிவையே.

திவ்விய தத்துவ சங்கீர்த்தனம்.

வெண்பா.

பாப்பயன் கண்டாய் பழுதில தொல்புகழ்
நாப்பயன் கண்ட நவினுதி—காப்பப்
பரதத் துவத்துப் படரு மனனே
பரதத் துவத்துப் பரன்.

பொறிபுல னந்தக் கரணம் புலமில்
செறிநல மந்தச் சிவமே—நெறியல
நின்று வருந்த னெடியவ் பாப்பயன்
நின்று வருந்த ணிறை.

நம்பாற் றவறேது நம்பாற் பழுதவ
வம்பாற் கெடுதி வழக்கின்று—செம்பாற்
றமணியஞ் செய்த தருமற்பாப் பையன்
றமணியஞ் செய்த தக.

விழியா வினைந்து வினைபுரீஇச் செப்பு
மொழியா லஞரா மொழிதி—பழியாச்
சினத்த வரக்கற் செறித்தபாப் பையன்
சினத்த வரக்கன் சிரம்.

போகஞ் சுகமே பொறியிலி பொன்றுத
வாகஞ் சுகமே யறைதிமண்—மோகந்
தருபாப் பயன்கருத் தாற்பயி லார்தந்
திருபாப் பயன்கருத் தான்.

கரும்பினைக் கேள்வனைக் கண்டத்து முக்கட்
கரும்பினைக் கேள்சுகங் கண்டா—யரும்பினைத்
தேன்பாடும் பட்டச் செழுநீர்ப் பிறையாறு
வான்பாடும் பாப்பயன் வாழ்த்து.

புண்ணிய நீறு புனைஇப் புரிவடங்
கண்ணிய மேலன காணூஉ—நண்ணிய
பாப்பய னென்னப் பகருதி வானக
மீப்பய ணுகு மிக.

சங்கங் கருதிச் சரண்புகி னன்றியே
பங்கந் தவிர்தல் பழுதவந்—தங்கும்
பருவரால் மேதி பருகும் பிறைசை
யொருவரா லொன்றினை யொன்று.

மகளிர் விழிக்கு மயங்கிக் குவளை
யகலு ளலர வகலும்—பகலில்
பிறையாறு மேய பெருமா னொருமான்
பிறையாறு மேய பிரான்.

சென்று புகழ்ந்து திருவடி பேணினா
மின்று பிறந்திங் கிருந்தனந்—துன்று
சிறுகூனன் முத்தீன் செறுசேர் பிறைசை
யறுகூனன் பாப்பய னூர்.

அந்தரத் தாரு மமரர் திருவினும்
அந்தரத் தாரு மரியரே—சுந்தரத்
தாயமாற் பூவை தழையும் பிறையாற்றுத்
தூயபாப் பையற் றொழு.

வாழிய நெஞ்சே வளவனற் பாப்பயற்
றாழிய கொண்டாய் தகுதிய—தாழிய
சீவகற் செற்ற திறத்துத் திருநெறி
பாவகற் பற்று பரம்.

பாவகந் தீர்ந்து பரகதிக் காளாவார்
நாவக நின்று நவிலுபு—தீவக
மானென்ன பாப்பய மாறன் மறையினைத்
தானென வேத்துந் தரம்.

வாழி மறைநூல் வழங்கு பெருநெறி
வாழி சிவர்கமம் வாசிப்பார்—வாழி
புவனந் தருவான் பொலிந்தபாப் பையன்
கவனந் தருவான் கழல்.

திவ்விய சகள சங்கீர்த்தனம்.

கலி விருத்தம்.

சீவனியவிசை தூரியமேற்றரு டேவன்பர தேயன்
சீவனியவிசை பாவலனுவலன் செய்கைநல மேய
சீவனியவிசை சுந்தரிசீகரச் சிக்கன்பர பக்கன்
சீவனியபிறை யாற்றினிற்பாப்பயச் செம்மலடி செப்பே.

சீருளாவுவரு பேருளர்தேசிகன் தீர்த்தனழ லாடி
சீருளாவ்வரு பேருமைகொண்டிடச் செய்யுமற வோர்கள்
சீருளாவுவரு பேடுமல்கால்குடை செப்பந்தரு பெட்பன்
சீருளாவுபிறை யாற்றினிற்பாப்பயச் செம்மலடி செப்பே.

சீகரத்தன்சடை யோன்பிதாநாயகன் சேந்தனழ லாடி
சீகரத்தன்வர னீச்சுரன்பாண்டரங் கன்கோணுரி திண்ணன்
சீகரத்தன்சமன் முன்னவன்யானையை செற்றான்பிதா முற்றான்
சீகரத்தன்பிறை யாற்றினிற்பாப்பயச் செம்மலடி செப்பே.

சீதமாடுசடை நாயகன்யோகியன் செல்வன்ஞான மூர்த்தி
சீதமாடுநரர் தீர்ப்பவன்மாபதி பூதிபதி நாதன்
சீதமாடுகிரீ சன்வரன்மாலயன் சேரும்மழு வாளி
சீதமாடுபிறை யாற்றினிற்பாப்பயச் செம்மலடி செப்பே.

சிலீமுகத்தமதன் சம்பரசூதனன் தென்றற்கிறை தேரான்
சிலீமுகத்தமதன் மோகனஞ்சேரவிண் ணோர்களரம் பையர்
சிலீமுகத்தமதன் வானவர்தோயவெ மூப்பொற்குருத் தேறல்
சிலீமுகத்தபிறை யாற்றினிற்பாப்பயச் செம்மலடி செப்பே.

சிறையுலாவுசுடர்க் கண்ணவன்மாலயன் சேருச்சித மேயான்
சிறையுலாவுசிகி மேலவன்சித்திரச் சேவற்கொடி யாசான்
சிறையுலாவுநகர் மேவலும்வெவ்வினை தீரநலந் தந்தான்
சிறையுலாவுபிறை யாற்றினிற்பாப்பயச் செம்மலடி செப்பே.

சிலையுடையகரன் றற்பரனீறணி செல்வன்விடை யூர்தி
சிலையுடையவனன் பிஞ்ஞகன்புண்ணியன் செவ்வேள்குரு சித்தன்
சிலையுடையதவற் காரருள்செய்தவன் செண்டாயுதன் றந்தை
சிலையுடையபிறை யாற்றினிற்பாப்பயச் செம்மலடி செப்பே.

சிந்தமாடுசடை நாயகன்முக்கணன் சேரர்பெரு நாதன்
சிந்தமாடுதிரி யம்பகனம்பனு னந்தன்பவன் சேடன்
சிந்தமாடுகவி சொன்முனியாண்டவன் வாமன்பிதா சித்தன்
சிந்தமாடுபிறை யாற்றினிற்பாப்பயச் செம்மலடி செப்பே.

சினையகத்தவுயிர் மேவருஞானமே செப்பவருடந்தோன்
சினையகத்தவுயிர் தாவரமாதியுஞ் சேரவருளீந்தோன்
சினையகத்தவுட லாகவிவ்வையகஞ் சேர்த்தமமு வாளி
சினையகத்தபிறை யாற்றினிற்பாப்பயச் செம்மலடி செப்பே.

சித்திரத்தபுரி நூலினர்விப்பிர ரையர்மறைச் சேரர்
சித்திரத்தவர் மோனியர்யோகியர் கோபங்கெடச் செற்றோர்
சித்திரத்தமுறத் தாபதர்சீவகர் தேறப்பதங் கண்ட
சித்திரத்தபிறை யாற்றினிற் பாப்பயச் செம்மலடி செப்பே.

திவ்விய நாம சங்கீர்த்தனம்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வேதநூல் சைவநூல் விளம்பு கீதை
மிருதிபுரா ணங்கலைகள் வேத வாதம்
போதநூல் வல்லவர்க்கு மெட்டாப் போதன்
பூவுலகிற் றுன்றோன்றிப் புனித ணுகி
யோதநூல் சிறிதறிய வொண்ணு வென்ற
னுள்ளகத்தே யானந்த வுததி செய்து
பாதநூல் பரிந்தளிக்க வந்த தேவன்
பாப்பயனென் றறிநர்புகழ் பண்பி னுனே.

சாத்திரங்கள் தோத்திரங்கள் சமய வாதஞ்
சன்மார்க்க நெறிபலவுந் தத்து வத்தைக்
காத்திரமாய்க் காட்டாமை யுலந்து போகக்
கடைப்பிடித்துத் திரிந்தவெனைக் களிப்புட் டாக்கி
நாத்திரங்கொண் டேத்திடவு நலிவு றாமே
நாடிடவுந் தொண்டுசெய நயந்த ஞானி
பார்த்தருளிப் பரிந்தளிக்க வந்த தேவன்
பாப்பயனென் றறிஞர்புகழ் பண்பி னானே.

வேதாந்த நிலையென்ன சித்தாந் தத்தின்
மெய்யென்ன விரிந்தபுகழ்க் கலையி னூர்வும்
போதாந்த மெய்ம்முடிவும் புகல்வ தென்ன
புத்தடியே மாகாதேம் புந்தி மாழ்க
நாதாந்தத் திருவீதி நடத்தி நின்று
ஞானநடங் காட்டுவித்த நண்பன் ஞானி
பாதாந்தம் பரிந்தளிக்க வந்த தேவன்
பாப்பயனென் றறிஞர்புகழ் பண்பி னானே.

அந்தமுமா யாதியுமா யயன்மால் தானு
யாரணமாய்க் காரணமா யார்த்தி யாகிப்
பந்தமுமா யதுதணிந்த பரம மாகிப்
பாவியேன் றனையாளும் பரம ஞானி
செந்தமிழ்மா லைபுனைந்து கல்வி வல்லோர்
செப்பமகிழ் பிறைசைவயின் செழுநீர்ப் பட்டப்
பந்தமுமாய்ப் பரிந்தளிக்க வந்த தேவன்
பாப்பயனென் றறிஞர்புகழ் பண்பி னானே.

உன்னுதற்கு மிசைக்குதற்கு மொண்ணு தென்ன
வுபநிடத முள்ளத்தா னுன்ன வுன்ன
என்னுதற்கும் பாடுதற்கு மரிய சோதி
யேழையேன் றனையாளப் படிவங் கொண்டு
நன்னுதற்கும் பொன்னதற்கும் நவின்மண் ணிற்கு
நாட்டநீ கொள்ளாதே நயந்தா யென்று
பன்னுதற்குப் பரிந்தளிக்க வந்த தேவன்
பாப்பயனென் றுலகர்புகழ் பண்பி னானே.

யாதுபதம் யாதுமுடி யென்று தேடு
மிமையவர்க்கும் பாவலர்க்கு மெட்டாச் சோதி
ஓதுகலை மெய்ப்பொருண்மா னுடனுய்த் தோன்றி
யுண்மையறி வானந்த முரைத்த ஞானி

சாதியீதஞ் சமயநெறி கடந்தப் பாலே
 தன்மனமே யாதியமும் மூன்றுந் தாண்டிப்
பாதுகைதான் பரிந்தளிக்க வந்த தேவன்
 பாப்பயனென் றுலகர்புகழ் பண்பி னானே.

அரவமெனு நுண்ணிடையார் கனிந்த வாய்க்கு
 மவர்குவளைக் கண்ணதற்கு மறியா நெஞ்சத்
தரவமெனுங் குன்றுநிகர் தனபா ரக்கு
 மாவலழிந் தவசமுறு மரிய பாவி
கரவமுடை வெம்மனத்தேன் றன்னை யாளக்
 கடைக்கணித்த பரம்பொருள்மெய் யறியார் தீயப்
பரவமுடை பரிந்தளிக்க வந்த தேவன்
 பாப்பயனென் றுலகர்புகழ் பண்பி னானே.

முப்போது நீர்குடைந்து வணங்குஞ் சித்தர்
 முனிவோர்கள் வானவர்கள் முன்ன நிற்கக்
கப்போது கருவாயிற் பற்றி நின்ற
 கடையேனுக் கருள்புரிவான் கனிந்த ஞானி
செப்போது தனமடவார் திறமா னீத்த
 தெள்ளமுத வடிவன்வான் மேய கோத்த
பப்போது பரிந்தளிக்க வந்த தேவன்
 பாப்பயனென் றுலகர்புகழ் பண்பி னானே.

சொல்லெல்லா நாதமெனப் பெற்றோ ருக்குந்
 துரிசறுத்த யோகியர்க்குந் தோன்ற லார்க்கும்
பல்லெல்லாந் திறந்துபரு வரமுன் காட்டிப்
 பார்மீதி யாசிக்கும் பண்போர்க் கீந்து
செல்லெல்லாந் திகழ்வயல்சூழ் செய்ய நாடன்
 தினம்வழுத்தக் கடன்மீது சென்ற மீக்கப்
பல்லெல்லாம் பரிந்தளிக்க வந்த தேவன்
 பாப்பயனென் றுலகர்புகழ் பண்பி னானே.

தோற்றுகின்ற பொருண்முழுதுங் கண்ணிற் காட்டித்
 தோற்றமிவை யனைத்தினுக்கு மியானே யென்றுந்
தோற்றுகின்ற பொருண்முழுது மியானே யென்றுந்
 தோற்றமெனிற் பிறிதில்லைச் சொன்னே னென்று
மாற்றுகின்ற வுபதேசக் கிரமந் தன்னு
 லவனிமாந் தரையெல்லா மாண்ட ஞானி
பாற்றுகின்ற பரிந்தளிக்க வந்த தேவன்
 பாப்பயனென் றுலகர்புகழ் பண்பி னானே.

திவ்விய ரூப சங்கீர்த்தனம்.

———:-o-:———

கலிவிருத்தம்.

தேவர் சித்தர்வித் தியாதரர் கின்னரர்
மூவ ரியோகியர் முற்று மறிகிலார்
பாவ மாற்றிய பாப்பய தேவனே
யாவர் நின்னுரு வின்றிசைப் பாரரே.

அருவ மாதிய மூன்று மளித்துளாய்
துரிய மேவிய சுத்தர்கட் காமெனின்
பரிய முந்திய பாப்பய தேவனே
உரியர் யாவர்கொ னின்னுருக் கூறற்கே.

வான மாதி வயங்கிய பூதங்கள்
ஞான நாயக நின்னுரு நாட்டுவார்
பான போனக பாப்பய தேவனே
யான கற்பனை யங்கவை யாவையே.

எண்கு ணத்தவ னெட்டுரு வோதுவார்
பண்கு ணத்தவர் பாற்படு கின்றிலேன்
பண்கு ணத்தவ பாப்பய தேவனே
எண்கு ணத்தவ னெவ்வுருக் கொள்வதே.

முக்கு ணங்களுண் முற்குண னின்னுரு
தக்கு ணங்கற் றயாவெனக் கூறுவார்
பக்கு ணர்ந்தவப் பாப்பய தேவனே
எக்கு ணங்க ளிறைவநிற் கூறுமே.

இச்சை யாதி யிலகிய சத்திகள்
விச்சை மேனி விளக்கமெற் கூறிலோ
பச்சை மேனிமால் பாப்பய தேவனே
இச்சை கொண்டுநா வெங்ஙன மேத்துமே.

ஏழு கோடி மனுக்கணி னின்னுரு
தேரு மாலெனத் தேசிகர் கூறினர்
பாரு மாலெனும் பாப்பய தேவனே
வாழு மாறு வழுத்துவ தெங்ஙனே.

சுத்தம் ஞானம் பிரணவஞ் சூழிலோ
நித்த னின்னுரு நேரெனச் சொல்லுமால்
பத்தர் மாலுறும் பாப்பய தேவனே
நித்தங் கண்டு நிகழ்த்துவ தாவதே.

திருந்து மாமறை தேறுந் தலைவனி
யருந்து மாறருண் மேனி யணித்தனை
பருந்து மாலுறும் பாப்பய தேவனே
விருந்து கண்டு விளம்புவ தெற்றரோ.

உலக நீதி யுறுபிறை யாற்றின்கண்
திலக மேனிச் சிவகுறி யாயினை
பலக மேனிலைப் பாப்பய தேவனே
கலக நாயினேன் காணக் கிடைப்பதே.

திவ்விய கிரியா சங்கீர்த்தனம்.

குறள்வெண் செந்துறை.

ஒருதொழி லில்லையென் றாதேடா காளம்
	உண்மைப்பாப் பையற்கென் றாதேடா காளம்
மருதொழி லியாவையு மூதேடா காளம்
	மருவின னென்பொருட் டூதேடா காளம்.

ஆதித்தன் முன்னரே யூதேடா காளம்
	அம்புயம் பூத்ததென் றாதேடா காளம்
சோதித்தண் பாப்பைய னூதேடா காளம்
	சுருதியைப் பாடிடு மூதேடா காளம்.

அகார வுகாரத்தி லூதேடா காளம்
	ஆகுங்கா யத்திரி யூதேடா காளம்
மகாரப் பாப்பயனு லூதேடா காளம்
	மாயை யுதித்திடு மூதேடா காளம்.

ஐந்தக் கரங்களு மூதேடா காளம்
	ஐந்தொழிற் செய்யுமென் றூதேடா காளம்
எந்தைப்பாப் பையனென் றூதேடா காளம்
	ஏகாந்தஞ் செய்யுமென் றூதேடா காளம்.

உண்ணு முறங்குநின் றூதேடா காளம்
	உருகும் பருகுமென் றூதேடா காளம்
நண்ணும் பரம்பொரு ளூதேடா காளம்
	நந்தம்பாப் பையனென் றூதேடா காளம்.

பார்க்கும் பரிசிக்கு மூதேடா காளம்
	பிரதமென் சென்னியி லூதேடா காளம்
சேர்க்குந் திருவரு ளூதேடா காளம்
	செய்திடும் பாப்பய னூதேடா காளம்.

சமய விசேடமு மூதேடா காளம்
சத்திய நிர்வாண மூதேடா காளம்
அமையும்பாப் பையற்கே யூதேடா காளம்
ஆருக் கியலுமென் றூதேடா காளம்.

நஞ்செய லற்றபி னூதேடா காளம்
நாதன் செயலான தூதேடா காளம்
தஞ்செய லற்றவர்க் கூதேடா காளம்
தஞ்சம்பாப் பையனென் றூதேடா காளம்,

சும்மா விருத்தலே யூதேடா காளம்
சுகமென் றிருத்தின னூதேடா காளம்
கைம்மா வுரித்தவ னூதேடா காளம்
காகுத்தன் பாப்பய னூதேடா காளம்.

பிறையாற்றில் வந்தன னூதேடா காளம்
பிணியாவு நீங்கிற்றென் றூதேடா காளம்
துறையாற்றி னின்றன னூதேடா காளம்
துரியன்பாப் பையனென் றூதேடா காளம்.

திவ்விய தேச சங்கீர்த்தனம்.

கலி விருத்தம்.

விழுமாமணிப் போக்கித்திரி பதகைவிர வுந்தார்க்
கழுநீர்பொதிந் துளபாப்பயன் காபாலியற் கிடம்போல்
தழுநீருல கெல்லாமறைத் தலைவிக்கக வுள்ளேன்
றெழுமாடவர் மன்றந்தல மெழுமாப்பிறை யாறே.

பொறிமாமயின் முருகன்புகர்ப் புங்கக்களிற் றிணையோ
னெறிமாநிதி யருள்பாப்பய னித்தற்கிடம் போலு
மறிமாமயி லகவக்கொண் மூ வலமாகட லலைக்கும்
வறுமாதவர் போக்கித்துகில் வளரும்பிறை யாறே.

வாளைநெடுங் கண்ணுண்மக னகலம்புலி மார்பிற்
காளையுரஞ் செய்பாப்பயன் கண்டாற்கிடம் போலுந்
தாளைசெயுந் தவத்தேவிளை தாரியிது வென்று
தோளைநெறி தூண்டும்முனி வரர்சூழ்பிறை யாறே.

மொய்யார்குழல் வேதமுதல் வீவிம்முலை தாக்குஞ்
செய்யான்செழுஞ் சூற்பாப்பய தேவற்கிடம் போலும்
மையார்விழி வேலாஞ்மிகு மையலுறு வியவன்
வெய்தாவிழி புல்லத்துயர் வெல்லும்பிறை யாறே.

நீலியயி லேந்துங்கையா ணிரப்பேநிறுத் திட்ட
மோலியய னரிபாப்பய முத்தற்கிடம் போலும்
பீலிமயி லாடக்குயில் பாடப்புற வதிருஞ்
சாலிவய லூடேயனஞ் சாரும்பிறை யாறே.

கீழ்ப்பாற்கரி யூர்திமுதற் கிளருந்திசை முதலோர்
வேட்பால்விளி தீர்பாப்பயன் மேலோற்கிடம் போலும்
மேற்பாற்குலம் விளங்கமறை வேள்விமகந் துலங்க
நாற்பாற்குல மோங்கநல மோங்கும்பிறை யாறே.

காசிநக ரிருந்துகதிர்ச் செல்வர்களி கூற
வாசிபல சொல்பாப்பய னறவோற்கிடம் போலும்
நாசிவழி பொருடேர் நரர் ஞானமுண ரான்றூர்
வாசிபெற வாசியருள் வானப்பிறை யாறே.

கல்வித்தவன் ஞானிக்கரு ணுதன்விசு வேசன்
சொல்விற்பனன் சூழ்பாப்பயச் சுத்தற்கிடம் போலுங்
கல்விக்கழ கம்மும்விழை கானப்பெருக் கம்முஞ்
செல்வக்குடி யும்மேதழை சென்னிப்பிறை யாறே.

வேதாந்தமுஞ் சித்தாந்தமும் வேறென்றெணு தவர்கள்
போதாந்தத்திற் சொல்பாப்பயப் புனிதற்கிடம் போலும்
போதாங்கைதை தென்னைசெய்ய வாழைபுன்னை நீழல்
தேதாங்கனி யுதிரமேதி செல்லும்பிறை யாறே.

செந்தாமரை மேலேயுறச் செங்நீர்பட்டத் தார
வந்தாமலே யுறமூவரா மையற்கிடம் போலும்
பைந்தார்மஞ்ஞை நந்தவனம் புக்குப்பதி கஞ்சொல்
செந்தார்பூவை பூவைதனிற் றிகழும்பிறை யாறே.

அல்லேயென மானைவெ லு மாத்தன்வழி யடிமை
சொல்லேருழ வன்றூண்டவன் றுதிப்பார்க்கிடம் போலும்
வில்லேருழ வர்நேரிறை வெற்றிக்கொளும் புலவோர்
கல்லேரிழை மாதர்நயங் கொள்ளும்பிறை யாறே.

திவ்விய பாத சங்கீர்த்தனம்.

கலித்தாழிசை.

அன்பைப் பெருக்கி யடிமை புரியென்ற
இன்பப் பெருக்கா மிறைவன்கழல்
எங்கள்பாப் பைய னிறைவன்கழல்.

ஆருயிர்க் கோருயி ராகி யமர்ந்திட்ட
சீருயி ராமெங்கள் செல்வன்கழல்
தீர்த்த னருணிறை செல்வன்கழல்.

இன்னரு ளேற்றமா யேற்றமாய்க் கூற்றத்தை
இன்னே தொலைத்த வினியன்கழல்
எழுநில வேந்த னினியன்கழல்.

ஈசான தேவன் முதலெண்மர் தங்களைப்
பேசாமற் றந்த பெரியன்கழல்
பிழைதவிர்த் தாண்ட பெரியன்கழல்.

உண்மையு மின்மையு முள்ளத்துக் காட்டிய
நுண்மை யறிந்த நொடியன்கழல்
நூலோதி நின்ற நொடியன்கழல்.

ஊமை யெழுத்தி லொருமூன்று தந்திடுஞ்
சீர்மை யளித்த திறலன்கழல்
செல்வ மளித்த திறலன்கழல்.

எண்ணே யெழுத்தினை யீதெனப் போதித்த
கண்ணே யெனுமெங் கருணைகழல்
காதல னுகுங் கருணைகழல்.

ஏரக மோரக மென்னக மாக்கிய
சீரகச் செட்டி தினியன்கழல்
சீரகச் செட்டி தினியன்கழல்.

ஐது மறைவழி யாகமச் சீர்வழி
மெய்துயர் தீர்த்த விமலன்கழல்
வேதாந்த போத விமலன்கழல்.

ஒப்பனை யம்மை யுலக மளித்திடச்
சித்த மருள்செய்த சித்தன்கழல்
சித்த னருட்சாங்கு சித்தன்கழல்.

ஓதா துணர்ந்தார்க்குப் போதாய வாழ்வீனும்
நாதாந்த நாட்டு நளன்றன்கழல்
ஞான நடங்கா ணளன்றன்கழல்.

ஔவையார் கண்ட வருமைக் குறளதைச்
செவ்வையாய்ச் சொல்லிய தேவன்கழல்
செம்மைசேர் பாப்பய தேவன்கழல்.

திவ்விய மங்கள சங்கீர்த்தனம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செயிரறு தவத்த போற்றி சேயிழை பாக போற்றி
வயிரவொண் குழைய போற்றி வாரணச் செல்வ போற்றி
கயிரவப் பண்ணை சூழுங் காவிரிப் பிறைசை மேய
பயினவ போற்றி யெங்கள் பண்ணவ போற்றி போற்றி.

காலமூன் றுணர்ந்த யோகி கருதல ரேறு போற்றி
ஆலமன் றருந்தித் தேவ ரனூர்தவி ராள போற்றி
சீலமே குணமே செல்வத் தேவனே பிறைசை மேய
வாலறி வுடையாய் போற்றி வள்ளலே போற்றி போற்றி.

மண்ணகங் களிக்க நின்ற மால்வரை போற்றி போற்றி
கண்ணகங் களிக்க நின்ற காவல போற்றி போற்றி
பண்ணகங் களிக்க நின்ற பாவல போற்றி போற்றி
எண்ணகம் பிறைசை மேய வெந்தையே போற்றி போற்றி.

கத்துவெண் டிரைசூழ் ஞால வாழ்வினைக் கருதி நின்று
பத்தரைப் பவமு ஞற்றிப் பன்னெருக் கடைந்து வேத
பத்தரைப் பணிந்து மேன்மை பற்றுறு நெறியிற் பட்ட
எத்தனைப் பிறைசை மேயா யேற்றுக போற்றி போற்றி.

பாம்பணைக் கடவுள் பாத பங்கயம் பற்றி நின்ற
வாம்பணைத் தோளி யோடன் றுதிவ ராகற் பேணத்
தேம்பவிற் சீர்த்தி தந்த தேசிக கூற்றின் கூற்றே
யாம்பலம் பிறைசை மேய வாண்டகை போற்றி போற்றி.

தத்துவ நெறியீ தென்று சமரச நிலையிற் காட்டிச்
சத்துவ வண்ணங் கூறிச் சாதித்தா யைய மற்றுக்
கத்துவ தவமே காணீ காவல வென்று போதஞ்
சொற்றவ பிறைசை மேய சுகத்தவ போற்றி போற்றி.

சிற்றிடை மாத ரார்தந் தீங்கிழை போகம் வேட்டுப்
பற்றினைப் பற்றுப் பாவி பாவலர்க் கிரங்கும் பாதம்
பற்றுபு நிற்பேன் கொல்லோ பாப்பய பிறைசை மேய
நற்றுணை நாத நங்க ளுயக போற்றி போற்றி.

கருணையு மின்ற மற்றக் காட்சியும் பொறையு மில்லேன்
தருணநீர்த் தகைமை யில்லேன் சாந்தமே யில்லேன் சற்றும்
வருணநீர்த் தரங்க மேய வாரிதி யடியார்க் கென்றும்
அருணையே யாளாய் கொல்லோ வடிமையைப் போற்றி போற்றி.

மாசிலாக் குலத்து வந்து வழிவழி யடிமை செய்யு
நேசமிக் குடையி ரண்டு நிருபர்க்குச் செல்வத் தோடு
பேசுறு கற்பு வாய்ந்த பெண்டிருஞ் சிறுவர் தாமுந்
தேசுற வளித்தாய் தேவ தேவனே போற்றி போற்றி.

பதிவளங் கொண்ட கொண்டற் பாப்பய தேவ போற்றி
மதுவளங் கொண்ட கொண்டன் மாதவ போற்றி போற்றி
புதுவளங் கொண்ட கொண்டல் போற்றியே போற்றி போற்றி
புதுவளங் கொண்டாய் போற்றி போற்றியே போற்றி போற்றி.

திவ்வியோபதேச சங்கீர்த்தனம்.

வஞ்சித் தாழிசை.

தெரிவையரின் வருந்தாமே—யறிவையுறப் பணிந்திடுவீர்
பரிவையவிழ் பாப்பயன்றன்—றருவலர்சீர் குறிப்பீரே.

நாடவளின் வருந்தாமே—கேடலறப் பணிந்திடுவீர்
பாடலர்வேள் பாப்பயன்றன்—நாடலர்சீர் குறிப்பீரே.

இன்மொழியின் வருந்தாமே—துன்பொழியப் பணிந்திடுவீர்
நன்மொழிவேள் பாப்பயன்றன்—வன்மொழிசீர் குறிப்பீரே.

நற்றிருவின் வருந்தாமே—பெற்றிடநீர் பணிந்திடுவீர்
கற்றவர்சேர் பாப்பயன்றன்—சொற்றவருக் குறிப்பீரே.

இந்நிதியின் வருந்தாமே—நந்நெறியிற் பணிந்திடுவீர்
செந்நெறிசேர் பாப்பயன்ற—னந்நெறியைக் குறிப்பீரே.

புன்பொருளின் வருந்தாமே—துன்பொழியப் பணிந்திடுவீர்
நன்பொருளாம் பாப்பயன்றன்—இன்பொருளைக் குறிப்பீரே.

வெம்புவியின் வருந்தாமே—கம்பலறப் பணிந்திடுவீர்
வம்பலர்சேர் பாப்பயன்றன்—நம்பலர்தாள் குறிப்பீரே.

காசினியின் வருந்தாமே—யாசொழியப் பணிந்திடுவீர்
பாசொளிய பாப்பயன்றன்—மாசொழிசீர் குறிப்பீரே.

வையகத்தின் வருந்தாமே—கையகத்துப் பணிந்திடுவீர்
பையகத்துப் பாப்பயன்றன்—மெய்யகத்துக் குறிப்பீரே.

திவ்வியானுக்கிரக சங்கீர்த்தனம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தோடார் கமலத் தவதரித்த தோன்ற லென்கோ தொல்புவியில்
வாடார் வழுத்து மாலென்கோ மலமூன் றொருங்கிங் கேகெடுத்த
ஏடார் கொன்றை யிறையென்கோ வினிய தேறற் றேன்பாடுங்
கோடார் பிறைசைப் பாப்பையனைக் குருவே யென்று பணிவேனே.

பணியும் பணியிற் பணிவித்துப் பாடும் வண்ண மருள்செய்து
பிணியும் பிணித்த வல்வினையும் பிறகிட் டோடப் பெருங்கருணை
துணியுந் துணிவா னின்றேற்குத் துரியங் காட்டித் துரிசறுப்பா
னணியும் பிறைசைப் பாப்பையனே னன்ப னப்ப னருட்குருவே.

குருவாய் வருவாய் குவலயத்திற் கோவாய் வருவாய் கொடியவினை
யுருவாய் வந்த மறலிதனை யுறுத்தாய் மருத்தார் குவளைமலர்
தருவாய் தருவாய் மலராவாய் தண்டா மறைசொல் பாப்பையனே
கருவாய் பிறவி தனைத்துடைத்தாய் கைம்மா றெதுநின் கருணைக்கே.

கருணைக் கடலே கண்மூன்று காத்த கடலே யுவாக்கண்ட
தருணக் கடலே சாந்தமுதற் றண்மை காணுங் கடையேனை
வருணைக் கடலிற் பிறப்பித்து மானச் செல்வ மஃதளித்து
வருணைக் கடலிற் கவிபாட வைத்தாய் பிறைசைப் பாப்பையனே.

பயனேர் சிறிது மறியாதேன் பாவி மனத்தான் வருத்தமுற்று
நயனே ரணுவுங் கருதுகிலே னம்பா நின்சீர்ப் புணைபற்றிக்
கயனேர் பிறவித் தொடுகுழியைக் கடக்கக் கடவே னுவேனே
மயனேர் கதியைக் கண்டவந்த மாண்பி லெனையுங் காணாயோ.

ஓகோ பிறவித் துயர்கொடிதிங் கோவா தரற்றி நொந்தாலுங்
கூகூ நெஞ்ச மணுத்துணையுங் குறியா நின்ற குறைகண்டு
நாகூர் பிறைசை நற்றுணையே ஞான நாட்ட மளித்திடுவாய்
பாகூர் கன்னற் பாஞ்சுடரே பற்றிங் கறியேன் பாவியனே.

அன்னே யப்பா வென்கருணை யமுதே யரசே யருட்கடலே
தன்னே ரில்லாத் தனிமையனே தண்செய்ப் பிறைசைப் பாப்பையனே
மன்னே மன்றே மன்றகமே மணியே யணியே மனத்தகத்துக்
கொன்னே கவலை கொடுத்திடநான் குறையென் செய்தேன் கூறாயே.

கூறு படுமிம் மாயவினை குற்ற முடையார் தமைநாடும்
வேறு படுமிவ் வேழையனை வினைதீங் கிழைத்தல் வியப்பன்றே
மாறு படுமிவ் வுலகீன்ற மாப்பாப் பையனே நின்கருணை
யீறு படுத்து மிவ்வினையை யென்னே யிரக்கங் கொள்ளாயே.

கொள்ளக் கிடையாக் கொழுநிதியே கொண்ட போதிங் கெழுநிதியே
பள்ளக் குறும்பர் குலங்கழித்த பாப்புத் தேவ பழமறையை
விள்ளக் கிடைத்த பெருவாழ்வே வேத கீத வித்தகமே
யள்ளற் பழனப் பிறைசைவயி னருள்சூற் கொண்ட கற்பகமே.

கற்ப விறுதி மறைதேர்ந்துங் கருவி முதல பலதேர்ந்துங்
கற்ப முதல பலகொண்டுங் காணற் கரிய பாப்பையனே
யற்ப வுடல மெடுத்தவமே யலேந்து திரியு நாயேனைப்
பொற்ப வருளு ஞானமுமே பொருத்தி யாட் கொண்டருளுகவே.

திவ்விய மானச சங்கீர்த்தனம்.

கீர்த்தனங்கள்.

பைரவி—சாப்பு.

பல்லவி.

அறிவா ராருன்னை யறிவா லறிவாக
அறிகின்ற தன்றி மற் (றறிவார்)

அநுபல்லவி.

செறிவார் ஞான சுகோதய மேசுடர்
வருவா யெனுமோன வாரண பாப்பைய. (அறி)

சரணம்.

நித்திய நின்மல நிர்க்குண மென்றும்
நிரஞ்சன நிராலம்ப நிராமய மென்றுஞ்
சத்திய வாசா மகோசர மென்றுஞ்
சாற்று மருமறை சரணறி யாதென்றால். (அறி)

அறிவா யகிலகா ரணமா யானந்த
அருவாகிச் சுத்தமா யத்துவி தமாகிக்
குறியோர் குணமற்ற குடிலேபிர மந்தானுய்க்
கொண்டாடும் விந்தையைக் கண்டா ரொருவரிலே. (அறி)

ஒன்று மிரவிபல பாண்டத்துண் டாமுதகத்
துருவாகி நின்றூற்போ லுடலூறு றுநிகழ்ந்து
சென்றுங் கிருந்துபுலன் சிந்தைக்கெட் டாமனின்று
செப்புங்காட் சிமுதல் இருமூன் றளவைக்கெட்டாய். (அறி)

கங்குற் பழுதையரா வாகக்கண் டதுபோலக்
காணுப் பிரமமதைக் கண்டே னுலகமதாய்க்
கங்குல் விடிந்தபோது கதிர்முன் கயிறதாய்க்
காணுமா றன்றியே பேணுமா றுள்ளதோ. (அறி)

சுத்தி கண்சேர வின்றும்வெள் ளியேநிற்கும்
சுகரூபத் திருள்சேராச் சுத்தப்பி ரமமாகும்
சத்தி நெறியிதனைப் பரமார்த்தத் திற்சாராது
சகமே பழிச்சினு ரிகமேகண் டார்களால். (அறி)

சிலம்பிநூ றனைவாங்கி வைத்தது போற்சகஞ்
சித்தாம் பிரமநீ சிருட்டித்த தாமோ
வலம்புமப் பிரபஞ்ச மருநிலை காண்பதோ
ஆண்டவ னேயுனை வேண்டிக்கொண் டவரல்லால். (அறி)

மன்னும்பிரம் மத்தின்வானுய் வானின் வளியாய்வளி
தன்னி லழலாயழல் சலமாய்த் தரணியாகிச்
சொன்னவோ டதிதோன்றித் தோலாதி யதிற்றோன்றத்
தோன்றுப் பிர்மநீ தோன்றும லதினிற்றி. (அறி)

ஆறுதா துகள்கூடி யைந்துகோ சமதாகி
யருஞ்சுடர் கடந்தோறு முருவித் தடங்கும்போல்
வேறு பிரமநீயே விண்ணுதி களிறேயாய்
விந்தைகொண் டவ்வாறு சத்திய ருந்தேறுர். (அறி)

அலகின் மணிகள்வை யருங்கோவை யார்த்தபோ
தருநூல் பலநிறங் கொண்டது போலானுய்
இலகி னன்வாதி யியைந்த வவத்தையுற்று
யிரணிய ரன்றியோர் தரணிய றிவாரோ. (அறி)

நானென வேகருவி கருதல்பந் தமது
நழுவமுத் தியுண்டா நலிக்குஞ் செயலிலையால்
தானெனு மாமாயை தணியத்தன் னிலையுறுந்
தத்துவந் தானுகிச் சித்தாகி நிற்பதால். (அறி)

கன்ம வனுட்டயங்கள் கரணசுத் தியைத்தருங்
கரணசுத் திஞானக் கருத்தினைத் தான்றரூந்
தன்ம வனுபவந் தானும் பிரமமன்றே
தத்துவா தீதமெய்ச் சத்துவ பூரண. (அறி)

ஊனே யுயிரேயன்றி யுணர்வுவே றென்றுமிலை
யுடலாய பூதங்க ளோய்வற வோய்வுற்றால்
நானே பிரமமென நான்று னறிவதன்றி
நடுநிலை வேறொரு படுநிலை தன்னாலே. (அறி)

சத்துவ இயமாதி தனிநிலை கொண்டிங்குச்
சார்ந்தவா சனமீதிற் சற்சமா தியையுற்றுத்
தத்துவ மசிபொருள் தானுகி நின்றவென்
தத்துவோ பாயனை சத்திய நேயனே. (அறி)

வசந்தம்—ஆதி.

பல்லவி.

சுகத்தை யென்னென்று சொல்லுவேன்—பிரம்மானந்த
சுகத்தை யென்னென்று சொல்லுவேன்.

அநுபல்லவி.

சகத்திற் பிராந்திநீத்த சகிதப்ர காசவள்ளல்
சுகத்திற்ப்ர சித்தியுற்ற சுத்தன்பாப் பையதேவன். (சுகத்)

சரணம்.

ஆற்றும் விடயானந்த மன்று காணுனந்த
மளக்குந்தத் துவானந்த மணியணி யோகானந்தஞ்
சாற்றுஞா னுனந்தீஞ் சாட்சி யிதற்காமோ
சாமி சுகிர்தகுரு சாமி சிவானந்த. (சுகத்)

கருவி கரணமோயக் காணுவந் நிலைதனிற்
கண்டித ஞானமன்றி யகண்டிதா காரமா
யருவி திறந்தமடை யாறெனற் கியைவின்றி
யானந்த நாளுக வறிவா யனுபவித்த. (சுகத்)

தெங்கின் பழமுதிரக் குதிக்குங் கயவாய்மேதித்
தெளிந்தபால் வாளைமீன் குடித்துத் தெவிட்டாநிற்கப்
பொங்கும் பொழில்சூழ்பிறை யாற்றிற் றளியமரும்
புத்தாந்த சிற்கலைப் புத்தன்பாப் பையன்றந்த. (சுகத்)

கேளளி—சாப்பு.

பல்லவி.

மலர்ப்பதம் போற்றி—திரு
மலர்ப்பதம் போற்றி.

சரணம்.

அலர்ப்பதத் தோன்புகழ் — நலர்ப்பத மாதேவன் (மலர்)
சந்தத மிறைசொலு — நந்தியெம் பேரிறை (மலர்)
உனற்கருஞ் சீர்த்திசேர் — சனற்குமா ரம்முனி (மலர்)
இயாசங்கோ ணவைதீர்க்கும் — வியாசமா முனிவரன் (மலர்)

நாதப்பி ரம்மமுனுஞ்	—	சூதப் பிரம்மரிஷி	(மலர்)
கெடவுள்ள நோக்கிய	—	கடவுள்நா தப்பிரமம்	(மலர்)
கருவூர்ச்சித் தந்தீர்த்த	—	கருவூர்ச்சித் தத்தீர்த்தன்	(மலர்)
இருண்முனிக் கெடுத்தாளும்	—	அருண்முனி வரதேவன்	(மலர்)
பாழூர் புவிவென்ற	—	கீழூர் முனிபுங்கன்	(மலர்)
சிரமமு நீக்கிய	—	பரமுனி வரதேசன்	(மலர்)
இனந்தா ளறவோங்கும்	—	பனந்தா ளருண்முனி	(மலர்)
நஞ்சை வயல்சூழ்கூடல்	—	புஞ்சை சுகப்பிரமம்	(மலர்)
திருநட ராஜன்சொல்	—	திருநட ராஜக்கோ	(மலர்)
சிவப்பிர காசங்கொள்	—	சிவப்பிர காசத்தேன்	(மலர்)
அரூப திட்டிநீத்த	—	சொரூபா னந்தச்சுடர்	(மலர்)
சத்துவ நெறிதேர்ந்த	—	தத்துவ ராயன்றண்	(மலர்)
நாப்பய ஞமெங்கள்	—	பாப்பைய தேவன்றன்	(மலர்)
குருபரம் பரையிது	—	தருபரம் பரையருள்	(மலர்)
ஆண்டவ னடிமைமுத்துத்	—	தாண்டவ ராயன்சொல்.	(மலர்)

சௌராட்டிரம்—ரூபகம்.

பல்லவி.

பூரண பாப்பைய தேவப்ர காசனைப்
பூதலத் தெங்குங்கண் டேனே.

அநுபல்லவி.

நாரண ஞன்முக ஞய திரத்தவ
ஞன்சொல்ல நாஞகி நாடு முரத்தவன்
காரண மன்னர்கள் காணுந் தரத்தவன்
கடியதெனு—கொடியவினை
நடியமயை—ஓடியவருள். (பூரண)

சரணம்.

தானே முழுதாய்த் தழைத்த முதலவன்
தன்மைகண் டார்க்கரு ணீதன்
சாலமெ லாந்தடை நீக்கி யருள்செய்த
சாமிநா தன்குரு போதன்
வானோர் பெருமான் வனப்புறு நாயகன்
மாலை யணிபுய மோங்கிய தாயகன்
தேனார் மலரடி செப்புமிந் நாயகன்
சென்னியதி—லுன்னியணி
தன்னிசைய—னென்னவரும். (பூரண)

இராமக்கிரியை—ஆதி.

பல்லவி.

தரிசனங் கண்டேனே—பாப்பையதேவன்
தரிசனங் கண்டேனே.

அநுபல்லவி.

பரிசனச் சன்மார்க்கப் பத்தர்க ளுடன்கூடித்
துரிசனங் கொள்ளுமால் துரிய வனமுந்தேடித் (தரி)

சரணம்.

மூர்த்தி தலந்தீர்த்த முறையா கக்கொண்டு
முற்பூசை பிற்பூசை முழுமை யுங்கண்டு
சீர்த்தி மகாவாக்கியந் தேசி கன்விண்டு
செப்பிய வசனத்தைத் தெளிவு றக்கொண்டு. (தரி)

பத்தர்கள் துதிக்கும்ப றங்கிப்பேட் டைதாண்டிப்
பாவாணர் புகழக ரங்கரி யூர்வேண்டிச்
சித்தர்கள் செப்புஞ் சிதம்பர மதுசேர்ந்து
சிறந்த பிறையாறு திருத்தளி யிஃதோர்ந்து. (தரி)

சரியை நெறிகொண்டு சாலோ கமுங்கண்டு
சார்ந்த கிரியையாற் சாமீப மதுவிண்டு
உரியயோ காதியா லுருவொன்றி யேபண்டு
ஒளிரு ஞானபதத் துண்மையொன் றிணக்கண்டு. (தரி)

அடாணா—திசிரம்.

பல்லவி.

என்ன தவஞ்செய்தேனோ—நான்
ஏது தவஞ்செய்தேனோ.

அநுபல்லவி.

பன்னற் கரியவீசன் பரமன்பாப் பையதேவன்
சொன்னற் பதமாலை சூட்சி யறிந்துரைக்க. (என்ன)

சரணம்.

நாலாய மறைகாணு நம்பனை யான்பாட
ஞானமுங் கல்வியு நவின்றோர்க ளுடன்கூட
மேலாய பதம்யாவும் வீணென யான்நாட
வித்தகன் பாப்பையதேவனை யான்தேட. (என்ன)

காமாதி முக்குற்றக் கரிசவை தானோடக்
கங்குல் பகலற்ற கனவாழ் வெனைநாட
நேமாதி நிட்டைகள் நிச்சலு மெனைக்கூட
நேருந்தை மான்றலை நெறியனை யான்பாட. (என்ன)

முன்னைப் பழம்பொருளா முத்தன் றனைக்காண
முத்தாந்தச் செல்வத்தைக் கண்டுநா னுளனுணத்
தன்னைத்தான் றெரிதூரத் தத்துவந் தான்மாணச்
சகலமு நானுகிச் சாட்சிமாத் திரம்பூண. (என்ன)

முன்னேன் பழமறை முற்றுந்தான் கற்றேனே
முன்னு மனனுதி முறைமையிற் பெற்றேனே
தன்னே னடியரைத் தரணியி லுற்றேனே
தத்துவ மசிபொரு டானுகப் பற்றேனே. (என்ன)

விதியான செயல்யாவும் விரும்பியே செய்தேனே
வித்தகசி சிவபூசை யால்வினை நைதேனே
கதியான மகம்யாவுங் கருதாமற் செய்தேனே
காரண காரிய கல்வியா லுய்தேனே. (என்ன)

கல்யாணி—ஆதி.

பல்லவி.

இந்த மதிகொண் டிங் கெந்த விதத்துன்னைச்
சந்தத மெண்ணுவ லையா.

அநுபல்லவி.

பந்தபா சம்விண்ட நிந்தையி லாளனே
பத்தமுத் தசித்த பாப்பைய தேவனே. (இந்த)

சரணம்.

காமக் குரோத லோப மதாதியாற்
கட்டுண்டு நின்றதே பொய்யா—யிது
நேமக் கிரியைக ணித்தலுஞ் செய்யவே
நெறியொன்று காணுது மெய்யா—யைய. (இந்த)

பெண்டுபிள் ளையெனப் பண்டுப தார்த்தத்தைக்
கண்டபொ ழுதங்கே நிற்கும்—இது
தொண்டுபண் ணிப்பூசை யண்டிட வாவென்ருல்
துட்ட நெறிதனிற் சொக்கும்—ஐய. (இந்த)

வெய்யமோ கனர சாட்சி நடத்தவே
மேதினி வாழ்வை விரும்பு—மிது
துய்ய விவேக துரையர சாட்சிக்குத்
துட்டநே யத்தி லரும்பும்—ஐய. (இந்த)

மாயமாளவிகௌளி—சாப்பு. அம்சத்தோனி.

பல்லவி.

ஏகமத் வைதப் பிரமம்.

அநுபல்லவி.

சோக மோக நாஸ்தி—போக போக ஆஸ்தி. (ஏக)

சரணம்.

அத்வைதம் வாசா — மகோசர மனாதீதம்
தத்துவமப் பிரமேயஞ் — சர்வசமஞ் சச்சிதந்தம். (ஏக)
சுத்தம் அவ்யக்தம் — அவிகாரம் அநுபவம்
நித்திய நிர்குணம் — அனந்தம் நிரதிசயம். (ஏக)
அசலம் மூலம்சாந்தம் — சுயம்பிரகாசம் பிரமம்
விசலங் குணாதீதம் — விகிர்தன் பாப்பையன். (ஏக)

கமாசு—சர்வலகு.

பல்லவி.

அகம் பிரமா ஸ்மி.

அநுபல்லவி.

ஜகம் மித்தை கண்டறிநீ. (அகம்)

சரணம்.

அநித்திய பூதவுட லன்றேயிந் தியமன்று (அகம்)
ஆங்காரப் ராணவர்க்க மன்றுபுந் தியுமன்று (அகம்)
தார மனையுட லன்றுதந் திரமன்று (அகம்)
உற்பவன் விருத்தனன் ஞோர்கா னசிப்பனன்று (அகம்)
சத்திய ஞானானந்த மாம்பிர மத்தாகும் (அகம்)
எனக்கு மன்னியமாக வுலக மொன்றிலையறி (அகம்)
தனக்குத்தா னேசாட்சி யாகும்பாப் பையதேவன். (அகம்)

ஆரபி—ஆதி.

பல்லவி.

பிரக்ஞானம் பிரமம் பிறவிவேர்
பிடுங்கிடு மிது கிரமம்—இதுவே
பிராந்தியை நீக்குஞ் சிரமம்,

அநுபல்லவி.

பிரக்ஞான மந்திரம் பிராந்தியை நீக்கும்
பின்ன சன்னிபின்னல் துன்னலைப் போக்கும். (பிரக்)

சரணம்.

கன்ம வனுட்டய கருத்ததை வாட்டும்
காரண காரிய கல்வியைக் கூட்டும்
சன்ம வல்லல்களைச் சாராமை யோட்டும்
சத்தன்பாப் பையதேவ னித்தத்தைக் காட்டும். (பிரக்)

கற்பிதத் திரயங்கள் கருதாமற் பூட்டும்
கரணசுத் தியாவுங் கனக்கவே மாட்டும்
அற்புத விளையாட்டி னனுபவ மீட்டும்
ஆனந்த அஷ்டக அகநிலை மூட்டும். (பிரக்)

சுகர்பிர மாமுதற் சொக்கிடு நித்தம்
சூக்ஷ்மாதி தந்திரக் கலைகளி னத்தம்
சுகர்கா ணுமுதல் வேதத்திற் சுத்தம்
சுத்தன்பாப் பையதேவன் சுருதியின் வித்தம். (பிரக்)

முகாரி—சாப்பு.

பல்லவி.

இருத்திக் கொண்டான் றன்னைத்—தானாக
இருத்திக் கொண்டான்.

அநுபல்லவி.

அன்னி வயல்சூழ் பிறை
ஆற்றிற்பாப் பையதேவன். (இருத்)

சரணம்.

பாதபங் கயஞ்சூட்டிப் பரிவினென் வினையோட்டிப்
பக்குவா தீதங்காட்டிப் பகர்சுபா வமுங்காட்டி
நாததத் துவங்கூட்டி நம்பாற் பதிகாட்டி
நானுவ ததையாட்டி நகாரத் துவம்பூட்டி. (இருத்)

வானென்றும் வளியென்றும் வடவைத்தீ தானென்றும்
மண்ணென்று மறலென்றும் வகுத்த விவையாவுந்
தானென்ற சங்கற்பத் தெழுந்த சமுகமென்னுத்
சத்தன்பாப் பையதேவன் தத்துவா தீதபூர்ணன். (இருத்)

தன்னைக்கல் லாதகல்வி சதிரல்ல வென்றுசொலிச்
சாத்திரக் கற்ப கோத்திரச் சண்டையிற்
பின்னைப்பயன் பேதமை யளிக்கும்
பெரியார்பாப் பையதேவன் பேசாப் பிரமமாய். (இருத்)

ஆரபி—ஆதி.

பல்லவி.

எல்லாம் பிரமமயம்—இவ்வுலகம்.

அநுபல்லவி.

நல்லார் சொல்லுமறை வெல்லார் வெல்லுமறை
கல்லார் கல்லுங்கறை நல்லார் செல்லுந்தறை. (எல்)

சரணம்.

வேதம் வேதவாத சதுட்டயம் வேதாங்கம்
வேதோ பாங்கமுப வேத முபநிடதம்
பாதம் மிருதியுக தர்மஞ் சாதிவர்ணம்
பச்சிம மாச்சிரம் பகர்வில காரபதம். (எல்)

பதினெண் புராணங்கள் சர்க்காதி பஞ்சமம்
பகரு முப்புராணம் பதினெட் டிதிகாசங்
கதியெண்ணு அவைதிக சாத்திரத் திரயங்கள்
கற்பனை யாமத சற்பனை யாவையும். (எல்)

அண்டாண்ட பிரமாண்ட மவனி நிலைபல
அடுத்த சராசர மாயுள்கொண் டவைபல
தொண்டாண்டர் புவனங்கள் தொக்க கரணாதி
துரியநிலை கடந்த சுத்தன்பாப் பையதேவன். (எல்)

நாமாவலி.

தத்வமசி தத்வமசி தத்வமசி சத்யம்
தத்வமசி தத்வமசி தத்வமசி நித்யம்.

வாழ்த்து.

அன்பைப் பிறையாற் றமுதை யருளிறையை
இன்பப் பெருக்கைநாம் எந்நாளும் வாழ்த்துவமே.

பாப்பைய சுவாமி பதமலர் வாழ்க.

பாப்பைய தேவர் திவ்விய சங்கீர்த்தன மாலை
முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பறங்கிப்பேட்டை

ஸ்ரீ துரைசாமி ஞானிகள் துதி.

1. வாழ்த்துப்பாடல்.

(*a*) அருள் வாழ்த்து.

மாமுகற் போற்றுது மாமுகற் போற்றுதுந்
தூமுதற் கூறுந் துரைசாமி ஞானிதன்
றாமுகந் தானீத லான் (க)

சேயவற் போற்றுதுஞ் சேயவற் போற்றுதுஞ்
சேயவற் செப்புந் திறற்றுரை சாமிதன்
சேய்முகந் தானீத லான். (உ)

தூயவட் போற்றுதுந் தூயவட் போற்றுதுந்
தூயவற் சொல்லுந் துரைசாமி ஞானிதன்
றாமுகந் தானீத லான். (ங)

(*b*) முன்றில் வாழ்த்து.

ஞான மோன நலமவை நண்ணின
தான வண்டத் தடக்கோ னெருங்கினன்
பான லங்கட் பிராபரை தோற்றினள்
மோன நற்றுரை சாமிதன் முன்றிலே. (க)

இருக்கு நான்கு மறைக ளியம்பின
விருக்கு மண்ட ரிதய நிறுவினர்
கருக்கு மெவ்வக் கருத்து மறைந்ததால்
முருக்கு நற்றுரை சாமிதன் முன்றிலே. (உ)

அன்பி னாடலும் பாடலுங் கூடின
துன்பி னீங்கச் சுகமுறத் தோன்றிற்று
மன்பி னோங்கிய மாவரு ணாபுரி
முன்ப னான்ற முனித்துரை முன்றிலே. (ங)

(*c*) சீர் வாழ்த்து.

மோனக் கொழுந்தே முழுமுதலே முன்வருணைத்
தானக் கொழுந்தே தவநிலையே சான்றோர்தம்
பானக் கொழுந்தே பராபரமே சாமிதுரை
ஞானக் கொழுந்தே நடுக்கின்றி மே[illegible]ற்பாய். (க)

அத்தித் துரையே யருட்டுரையே மெய்த்துரையே
பத்தித் துரையே பருமணியே சாமிதுரை
முத்தித் துரையே முனமென்னைப் பாடுகெனுஞ்
சித்தித் துரையே சிதைவின்றி யேநிற்பாய். (உ)

முத்தப் பெருமானே மூர்த்தியருட் சாமிதுரை
கர்த்தப் பெருமானே கற்றூர் தொழுதிறைஞ்சும்
புத்தப் பெருமானே புத்தன் புகல்வருணைச்
சித்தப் பெருமானே சீருற்று நீநிற்பாய். (ந)

(*d*) பதி வாழ்த்து.

அமரடு பெரியவ ரறிவினை யறிபவர்
திமிரொடு திறல்வினை தெளிதரு புலவரர்
சமரொடு சினவினை சமராறு மரபவ
ரமரொடு மருள்பவர் வருணையி னமர்வரே. (க)

திருவொடு நலமொடு சிரமொடு வருபவர்
செருவொடு சினவினை செகுதிறல் விரகவர்
கருவொடு பலநல கலமுற வணிபவ
ரருவொடு மமர்பவர் வருணையி னமர்வரே. (உ)

இருவினை யநுபவ ரிசையுற வருபவர்
திருவினை யுறுமவர் திறலுறு வலியவர்
மருவினை யறுபவர் மருளற வருதவ
ரருவினை யருள்பவர் வருணையி னமர்வரே. (ந)

(*e*) மொழி வாழ்த்து.

மூவினையுந் தன்னருளான் முனமுடித்த முழுப்பொருளான்
தாவினையை நீக்குமருட் டனவருணைத் துரைசாமி
தேவினையும் பாவினையுந் தெரிசிக்க நலமளித்த
தீவகமான் பேர்கேளாச் செவியென்ன செவியே
திகம்பரனோர் சீர்கேளாச் செவியென்ன செவியே. (க)

பாட்டனைத்து நான்பாடப் பலனளித்த திறனுளி
வாட்டனைத்து மாண்பருளும் வளவருணைத் துரைசாமி
வீட்டனைத்து நற்கதிசேர் வியன்றுரியப் பதியாளன்
தேட்டனைத்தின் சீர்கேளாச் செவியென்ன செவியே
திகம்பரனோர் சீர்கேளாச் செவியென்ன செவியே. (உ)

இன்பநிலைக் கோத்திட்டை யெழிற்சித்த மரபாளன்
வன்புநிலை மாற்றுசமைப் பார்த்திபநன் மார்கழியிற்
றுன்பநிலை போக்குதிரு வனுடநாட் பூவுதித்த
திண்ணனிலை கேளாத செவியென்ன செவியே
திகம்பரனோர் சீர்கேளாச் செவியென்ன செவியே. (ந)

(*f*) உரிமை வாழ்த்து.

திருவருண் ஞானத் திறத்தோர்க்குத் தேவன்
திருநெறி கூடுந் திருத்துரை சாமி
பருவர னீக்கிப் படியது தந்தான்
பாவலர் கோமாற்குப் பாவலன் கண்டீர்
பார்வேந்தர் கோமாற்குப் பாவலன் கண்டீர். (க)

சீர்ப்பதி பூத்த திருவருட் கூத்தினன்
சீர்ப்பதி பாடுந் திருத்துரை சாமியெம்
பார்ப்பதி பாகப் பரம னருளினன்
பாவலர் கோமாற்குப் பாவலன் கண்டீர்
பார்வேந்தர் கோமாற்குப் பாவலன் கண்டீர். (உ)

பத்தவை பெற்ற பரமன் வருணையன்
பத்தவை தந்த பரியை யளித்தவன்
பத்த ரவைசூழ் பறங்கியில் மேவினன்
பாவலர் கோமாற்குப் பாவலன் கண்டீர்
பார்வேந்தர் கோமாற்குப் பாவலன் கண்டீர். (ங)

(*g*) வருகை வாழ்த்து.

மூர்த்தி தலந்தீர்த்த முன்னமே காட்டினன்
வார்த்தை வலவடிக் கெல்லீரும் வம்மெல்லாம்
நேர்த்தித் திறம்பாடி நித்தன் வருணைவாய்க்
கார்த்திகை மைந்தனைக் காணுதும் வம்மெல்லாங்
காகுத்தன் சேயினைக் காணுதும் வம்மெல்லாம். (க)

ஆன்றீ ரறிவீ ரலகில் பெருஞ்சித்தன்
மான்றீ ரருளடிக் கெல்லீரும் வம்மெல்லாந்
தேன்றோர் குரவன் றிருக்கிருஷ் ணபுரியின்
வான்றேரும் வள்ளலைப் பாடுதும் வம்மெல்லாம்
வாரிறை மாமகற் பாடுதும் வம்மெல்லாம். (உ)

சூட்சித் திறத்தீர் துரியன் சிவஞானி
மாட்சித் திருவடிக் கெல்லீரும் வம்மெல்லாம்
ஆட்சிச் சகமிசை யாள்துரை சாமிக்கோன்
வாட்சித்தன் கூத்தினை வாழ்த்துதும் வம்மெல்லாம்
மன்ன னதியோகி வாழ்த்துதும் வம்மெல்லாம். (ங)

(*h*) ஊசல் வாழ்த்து.

இருவினைப் பாசத் திளைப்புண்டே யெற்ற
விருவிசும்பிற் பாதலத் திம்பருறை நாட்டுக்
கருவிளிம்புற் றீங்கழியாக் கண்ணம் பெற்ற
வெறுவெளியூ டின்பவெள்ளத் தாடாமோ வூசல்
விருதுடையான் வெல்வருணை யாடாமோ வூசல். (க)

படங்கொண் மணியூசன் மேலிரீஇத் தேவன்
வடங்கொ டிருப்பாட்டு வாலி தியம்பிப்
படங்கொ டிறலி பணிப்படங்கப் பாடித்
தடங்கொ டிருநோக்கத் தாடாமோ வூசல்
தண்கிருஷ்ணை மாநகர்வா யாடாமோ வூசல். (௨)

அனகவுமா பதிசரண ராடி ரூச
லமலசிதா காசபதி யாடி ரூசல்
கனகசபா நடவரத ராடி ரூசல்
கமனதயா பரசொருப ராடி ரூசல்
வினகதுரை சாமிபர ராடி ரூசல்
விமலசுகோ தயமுதல்வ ராடி ரூசல்
பனகபூ டணசகித ராடி ரூசல்
பரமகுரு பரர்வருணை யாடி ரூசல். (௩)

(*i*) பாடல் வாழ்த்து.

மூல வினைபோக்க முத்தர் முயலுவரே
கால வினைகடந்த கந்தன் றிருமுன்றிற்
கீர்வலர்கோன் சித்தன் கணிக்க வருள்சேரும்
ஞானக் கொடிபாடும் பாடலே பாடல்
நாதன் வருணைநகர்ப் பாடலே பாடல். (௧)

குற்றங் குறைநீக்குங் கொள்கை முயலுவரே
பெற்றங் களிகூரும் பெம்மான் றிருமுன்றிற்
பேரருட் சித்தன் பிணிக்க வருள்சேரும்
பெற்றித் தகைபாடும் பாடலே பாடல்
பெருமை வருணைநகர்ப் பாடலே பாடல். (௨)

நன்மைச் சுகமுற்ற நல்லோர் விரும்புவரே
புன்மைச் சுகங்கடந்த புத்தன் றிருமுன்றிற்
போத னருட்சித்தன் புந்தி களிகூரும்
போதத் தமிழ்பாடும் பாடலே பாடல்
புரவலன் சீர்வருணைப் பாடலே பாடல். (௩)

(*j*) வாழியல் வாழ்த்து.

பூமடந்தை நாமடந்தை பொற்போ டுனைமணக்கத்
தாமடந்தை தந்தான் றனிச்சரணம் வாழியரோ
வாழியரோ வாழி வரும்பெண்ணை மாநதிதான்
சூழ்தரு நாட்டினிடைக் கோமான்றன் றொல்குலமே. (௧)

யோகநிலை ஞானநிலை யோகத் தெனைப்புணரச்
சோகநிலை வாட்டுஞ் சுதன்சரணம் வாழியரோ
வாழியரோ வாழி வரும்பெண்ணை மாநதிதான்
சூழ்தரு நாட்டினிடைக் கோமான்றன் றொல்குலமே. (௨)

தானவனே தானவனே தானத் தவனவனே
தானலபி டேகன் றனிச்சரணம் வாழியரோ
வாழியரோ வாழி வரும்பெண்ணை மாநதிதான்
சூழ்தரு நாட்டினிடைக் கோமான்றன் றொல்குலமே. (௩)

2. கனகமாலை.

நாமவழக்கம்.

கருமாலைப் பெற்றடியேன் கலங்கலுறு வண்ணங்
　　களித்தநின தருளடியைக் கனவினுங்கண் டடைவான்
பெருமாலைப் பெருந்தேவர் சித்தர்முதற் பெற்றிப்
　　பெருந்தகையோர் பெறும்பேறு பெருகுறுநின் புகழை
யுருமாலைக் கண்டடியே னுள்ளபடி யுரைக்க
　　வுவப்புடனே வருகவென்றிங் குண்மைநெறி கூறித்
திருமாலை சூடியெனத் திருப்பெயரோன் றளித்தாய்
　　திருவருணைத் துரைசாமி ஞானியெனுந் தேவே. (க)

மருண்மாலைப் பெற்றடியேன் மயக்கமுறு வண்ணம்
　　மாண்பினின தருளடியை மனத்தினுங்கண் டடைவான்
தெருண்மாலைப் பெருந்தேவர் சித்தர்முதற் சீர்த்தி
　　திகழ்தகையோர் பெறும்பேறு திகழுறுநின் புகழைப்
பொருண்மாலை கண்டடியேன் புகன்றபடி யுரைக்கப்
　　புனிதமுடன் வருகவெனப் புகழுநெறி கூறி
அருண்மாலை சூடியென வரும்பெயரோன் றளித்தாய்
　　அமர் வருணைத்துரைசாமி யண்ணலெனுந் தேவே. (௨)

துரைசாமி ஞானிகள் சுகநிலை வாழ்க.

துரைசாமிஞானிகள் என்னும் இப்பெரியார் (1885—1905) பறங்கிப்பேட்டையில் இராஜசேகரப்பிள்ளைக்குத் திருக்குமாரராய்ச் சாங்கு சித்தராய்ப் பிறந்து சகல சித்திவல்லவராய்ப் பரம நிஷ்டையில் சதா காலமுங்கூடியிருப்பவராய்ச் சென்னப்பநாய்க்கன்பாளையத்தில் சாக்ஷாத்காரமாய் விளங்குகிறுர். இவர் ஏழாம்பிராயத்தில் (6—11—1902-ல்) தமது கிருஹத்தில் கூடியபெருஞ்சபையில் இந்நூலாசிரியரைப்பார்த்து, சில சொற்றொடர்களையும் பொருட்டொடர்களையுங் கொடுத்துப்பாடுக என்ற சமயத்தில் இத்தோத்திரம் பாடப்பெற்றது. சுபமஸ்து.



நூலாசிரியர்:—
வித்துவசிகாமணி, ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை,
சிரபுரம் லாட்ஜ், சீகாழி.

PRINTED AT THE KUMARAN PRESS, SHIYALI.

KUMARAN PRESS,
SHIYALI.